
# உரைநடைத்தமிழ் நோக்கும் போக்கும்








**தமிழ் ஐயா வெளியீட்டகம்**
ஔவைக்கோட்டம், திருவையாறு – 613 204
தஞ்சாவூர் மாவட்டம்.

Scanned with CamScanner

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | உரைநடைத் தமிழ் நோக்கும் போக்கும் |
| வகை | : | உரைநடைத் தமிழ் ஆய்வு |
| பதிப்பாசிரியர் | : | க. கண்ணகி (04362 - 260711) |
| முதல்பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2047 (சூலை, 2016) |
| பதிப்புரிமை | : | தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு |
| நூல் அளவு | : | டெம்மி 1x8 |
| I.S.B.N. எண் | : | 978-81-930633-0-6 (V-1) |
| எழுத்து அளவு | : | 11 |
| பக்கங்கள் | : | 488 |
| படிகள் | : | 500 |
| கட்டுமானம் | : | சாதாரணம் |
| விலை | : | ரூ. 500/- |
| கணினி அச்சு | : | செ.தீபா (கிரியேட்டர் கிராபிக்சு) சிவகாசி |
| அச்சாக்கம் | : | செல்வவிநாயகம் அச்சகம், சென்னை |


கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகம் 23-07-2016 அன்று நடத்திய அனைத்துலக அளவிலான உரைநடைத் தமிழ் 14-ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல் ஆகும்.

54. திரு.வி.க வின் பன்முகப் பார்வை
அ. கிரேசிசெனோவா 311

55. தமிழ் தாத்தா உ.வே.சா.
முனைவர் கு.ச. செயசிறி 317

56. மு. இராகவையங்காரின் மருத்துவ உரைத்திறன்
ந.கே. கோமதி 322

57. திரு.க. வின் உரைத்திறன்
முனைவர் சி. சொர்ணமாலா 327

58. திரு.வி.க. வின் பெண்ணின் பெருமை உரைநடை நயம்
முனைவர் சா. கிரிசா 332

59. திரு.வி.க.வின் பெண்ணின் பெருமை ஒரு பேசும் சித்திரம்
பா. செல்வி 338

60. மறைமலை அடிகளின் உரைத்திறன்
க. ரேவதி 344

61. வ.உ.சி யின் உரைநடைத் தமிழ்
மீனாட்சி சரவணன் 349

62. செந்தமிழ் இதழில் மு. இராகவையங்காரின் உரைநடைத் தமிழ்
ச. காளிதாசன் 355

63. இரா.பி. சேதுப்பிள்ளையின் படைப்புகள் ஓர் ஆய்வு
முனைவர் க. சசிகலா 359

64. இரா.பி. சேதுப்பிள்ளையின் நடைநயம்
முனைவர் ஆ.பாக்கியலட்சுமி 365

65. வ.உ.சி. யின் வாழ்க்கை வரலாறும், படைப்புகளும், உரைச்சிறப்பும்
க. கெலன் 370

66. இரா.பி. சேதுப்பிள்ளையின் தமிழகம் ஊரும் பேரும்
முனைவர் செ. சிவகாமி சுந்தரி 377

67. தமிழுக்கெனத் தன்னையே செதுக்கிக் கொண்ட மாபெருஞ்சிறப்பி மகாவித்துவான்
முனைவர் வாணிஅறிவாளன் 382

68. மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் வாழ்வும் வரலாறும்
முனைவர் நா. கேமலதா 389




Scanned with CamScanner

# 57. திரு.க.வின் உரைத்திறன்



முனைவர் சி. சொர்ணமாலா
உதவிப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி
மதுரை

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இலக்கிய வளர்ச்சியே உரைநடை. கூற விழையும் கருத்துக்களைக் கற்போர்க்குப் பரப்புவதில் உரைநடையே முதலிடம் பெறுகிறது. இலக்கணம், இலக்கியம், சமயம் உள்ளிட்ட நூல்களுக்கு உரையாக மட்டும் இருந்த நிலை மாறி இன்று உரைநடை பன்முக வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வகையில் தமிழ் உணர்வோடு, விடுதலை உணர்வும் கொண்டு மணிப்பிரவாள நடையை இனிய, எளிய தீந்தமிழ் நடையாக மாற்றிய பெருமைக்குரியவர் திரு. வி. கல்யாணசுந்தரனார், அவரின் பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை என்னும் நூலின் வழி அவரின் உரைத்திறனை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## நடைச்சிறப்பு

நடைகள் பலவிதம். அவற்றைச் சிந்தனை மிக்க விழுமிய நடை, கருத்து, விளக்கநடை, தகவல் தருநடை, நாடகப்பாங்கு நடை, கதைப்போக்கு நடை எனப் பகுக்கலாம். எல்லா நடையும் ஒரே உரைநடை நூலில் அமைய வேண்டும் என்பதில்லை. அதிகமாக ஒரு நடை அமைந்திருக்க, பிற நடைகள் தேவைக்கேற்ப விரவி வரும். அவை இலக்கியத்தை மேலும் இனிமையாக்கும். ரா.பி. சேதுப்பிள்ளையின் நடை அத்தகையது. திரு.வி.க.வின் நடைச் சிறப்பும் சிந்தனையைத் தூண்டும், மேடைத் தமிழின் நாடகக் கூறுகள் கலந்திருக்கும். வினா விடையாக அமைந்திருக்கும் சிறப்புடையது.



Scanned with CamScanner